3.3.2021
அசல் வழக்கு எண்:159-2016

பி.வா.சா.1 வாலகுருநாதன் சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை தொடர்ச்சி

வா.சா.ஆ.15 ஆவணத்தின் சொத்து விபரத்தில் கீழ்புற நான்குமாலில் நாகம்மாள் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. சர்வே எண்.530-சி வடக்கு நான்குமால் ஒரே பொழி சர்வே எண்.248/4 உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.15 ஆவணத்தின் சொத்து விபரத்தில் சங்கிலி புஞ்சைக்கும் தெற்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் பு.வீராயி புஞ்சைக்கும், நாகம்மாள் புஞ்சைக்கும் மேற்கு என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.530சி க்கு கிழக்கே பு.வீராயி புஞ்சை என்றால் சரிதான் நாகம்மாள் புஞ்சையும் உள்ளது. பு.வீராயி புஞ்சை என்பது சர்வே எண்.248/5ல் கட்டுப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.15 ஆவணத்தில் தெற்கு நான்குமாலாக இருளாயி புஞ்சை என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணமானது அய்யாவு என்ற காளிமுத்து தேவருக்கு, நாகம்மாள் எழுதி கொடுத்த ஒத்தி ஆவணம் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் 3 நான்குமால் விபரம் மட்டுமே சொல்லப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண். 248/6ல் கட்டுப்பட்ட வீரபத்திரன் புஞ்சை என எங்களுக்கு பூர்வீகமான சொத்து என கிழக்கு நான்குமாலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் சொத்து விபரத்தில் மேற்கு பக்கம் அங்கப்பன் புஞ்சை என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் சர்வே எண்.248/5க்குரிய நான்குமால் காட்டப்பட்டுள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் மோசடியாக சர்வே எண்.530சி குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் வாதிக்கு பாத்தியமான சொத்து என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் நான்குமால் விபரம் குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.3 ஆவணம் மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் தாவாச் சொத்திற்கு சம்மந்தப்பட்டது அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.4 ஆவணத்தில் சர்வே எண்.248/6ல் கட்டுப்பட்ட சொத்து கீழ்புற நான்குமாலாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.4 ஆவணம் சர்வே எண்.248/5க்கு கட்டுப்பட்டது என்றும் மோசடியாக சர்வே எண்.530சி என குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தின் சொத்துவிபரத்தில் கீழ்புற நான்குமாலாக சர்வே

எண்.248/6ல் கட்டுப்பட்ட சொத்து காட்டப்பட்டுள்ளது என்றும் பி.வா.சா.6 ஆவணமானது சர்வே எண்.248/5க்கு கட்டுப்பட்டது என்றும் மோசடியாக சர்வே எண்.530சி என குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.6 ஆவணத்தில் மேல்புற நான்குமாலாக சர்வே எண்.248/4 காட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் சொத்து விபரத்தில் திருவேங்கடம் புஞ்சைக்கும் மேற்கு என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். திருவேங்கடத்திற்கு எங்களது வகையறாவினர் கிரையம் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.5 ஆவணத்தின் அசல் யார் கைவசம் உள்ளது என்றால் சேதமடைந்து விட்டது. பி.வா.சா.ஆ.5 ஆவணமானது மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது என்றும் சர்வே எண்.530சி குறிப்பிடபட்டுள்ளது என்றும் சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணத்தில் 18.9.1928ம் தேதிய ஒத்தி ஆவணத்தின் அடிப்படையில் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரிதான். **18.9.1928ம் தேதியிட்ட ஒத்தி பத்திரத்தின் சார் பதிவாளர் நகல் வா.சா.ஆ.22**. வா.சா.ஆ.22 ஆவணத்தில் சர்வே எண்.248/3ல் கட்டுப்பட்ட சொத்தை பொறுத்து ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.248/3ல் கண்ட சொத்தை காண்பித்து சர்வே எண்.248/4ல் கண்ட சொத்தை பொறுத்து வட்டாட்சியர் மூலம் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் மற்றும் திருமங்கலம் வட்டாட்சியரிடமும் தாவாச் சொத்து பூர்வீக சொத்து என குறிப்பிட்டுதான் பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து எனக்கு கிரைய பாத்தியப்பட்டது என்ற விபரம் 2009 வரை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. பத்திரம் காணாமல் போனதால் பூர்வீக பாத்தியப்பட்டது என நினைத்து கொண்டு இருந்தேன். அசல் கிரைய ஆவணம் காணாமல் போனது சம்மந்தமாக எதிர் வழக்குரையிலோ, நிரூபணவாக்குமூலத்திலோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது மூல ஆவணங்களிலும், கிரைய ஆவணங்களிலம் 530சி என மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சர்வே எண்ணும் விஸ்தீரணமும் மோசடியாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் சொன்னால் சரியல்ல. எனது மூல ஆவணங்களில் கட்டுப்பட்ட சொத்துக்கள் அனைத்தும் சர்வே எண்.248/5க்குரியது என்றால் சரியல்ல. சர்வே எண்.248/4 வாதிக்கு பாத்தியப்பட்ட நிலையில் மோசடியாக சர்வே எண்.248/4 எனக்கு பாத்தியப்பட்டது என பட்டா மாறுதல் நடவடிக்கையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச் சொத்தில் எனக்கு எவ்வித உரிமைமூலமும் இல்லை என்றால் சரியல்ல. மதுரை மாவட்ட வருவாய் அலுவலரின் தவறான உத்தரவின் அடிப்படையில் தாவாச்சொத்திற்கு பட்டா மாறுதல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்றும் வாதியின் உரிமை மூலத்தை

ஆட்சேபிக்க எனக்கு எவ்வித அருகதையும் இல்லை என்றும் தாவாச்சொத்தினை வாதி தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார் என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை - இல்லை.